## தலைப்பு 9 – நிருவாக மேன்முறையீட்டு நியாயசபை

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிருவாக மேன்முறையீட்டு நியாயசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 05 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 மே 05 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிருவாக மேன்முறையீட்டு நியாயசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் நியாயசபையினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 கட்டுநிதிச் சீராக்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் வழிகாட்டி இலக்கம் 06 இன் 7(vi) பந்தியின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் வருட இறுதியில் திறைசேரிக்குத் தீர்க்கப்பட வேண்டிய மற்றும் திறைசேரி யிடமிருந்து பெற வேண்டிய தொகையைச் சீராக்குவதற்காக கட்டுநிதி சீராக்கல் கணக்கு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் அக்கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுநிதி சீராக்கல் கணக்கு ஒன்று தயாரிக்கப்படாமையுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டது. | கட்டுநிதி சீராக்கல் கணக்கு தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

**ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| சபையினால் நிதி நிலைமைக் கூற்றில் மற்றும் ACA-6 படிவத்தில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக ரூபா 20,478,200 காட்டப்பட்ட போதிலும், திறைசேரி அச்சுக்குறிப்புக்களில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி காட்டப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்தால் நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்று தயாரிக்கும் போது இலக்கம் 02/2020 அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அச்சுக் குறிப்புக்களுடன் தனிப்பட்ட கணக்கின் மிகுதிகள் இணங்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் ஆதனம், பொறி, உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் கொம்ப்ட்ரோலர் ஜெனரலுக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் அவை திறைசேரிக் கணனி அச்சுப் பதிவுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. இது தொடர்பாக திறைசேரியிடம் விசாரித்து சரி செய்வதற்காகக் குறித்துக் கொள்ளப்பட்டது. | 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களுடன் தயாரிக்கப்பட்ட கணக்கு மிகுதிகள் இணக்கப்பட வேண்டும். |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்றில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) வருமானமல்லாத பெறுவனவு ரூபா 411,953 ஆனது செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | வருமானமல்லாத பெறுவனவு ரூபா 411,953 ஆன தொகை கட்டுநிதிப் பெறுவனவு மிகுதியில் உள்ளடக்கப்பட்டு செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | சரியாக கணக்கில் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) கட்டுநிதிப் பெறுவனவு ரூபா 27,840,000 என்பதுடன் அது ரூபா 28,714,253 ஆக காட்டப்பட்டிருந்தது. | வருமானமல்லாப் பெறுவனவு மற்றும் முற்பணம் அறவிடப்பட்டமை 458,900 உள்ளடங்கலாக ரூபா 28,714,253 ஆனது செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தனிப்பட்ட சம்பளம் மற்றும் செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 28,542,996 என்பதுடன் அது ரூபா 28,666,396 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | தனிப்பட்ட சம்பளம் மற்றும் செயற்பாட்டுச் செலவுகளின் கீழ் முற்பணக் கொடுப்பனவு ரூபா 12,000, புகையிரத ஆணைச்சீட்டுக் கட்டணம் ரூபா 3,400 என்பன உள்ளடங்கலாக இச்செலவு காட்டப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஈ) | முற்பணம் அறவிடப்பட்டமை ரூபா 458,900 மற்றும் முற்பணக் கொடுப்பனவு ரூபா 120,000 என்பன முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | ரூபா 458,900 ஆன முற்பணங்கள் அறவிடப்பட்டமை கட்டுநிதிப் பெறுவனவுகளின் கீழும் ரூபா 120,000 முற்பணக் கொடுப்பனவுகள் தனிப்பட்ட சம்பளம் மற்றும் செயற்பாட்டுச் செலவுகளின் கீழும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (உ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் 2020 திசெம்பர் 31 இல் இறுதிக்காசு மீதி சரியாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக காசு மீதி குறிப்பிடப்படவில்லை. | - மேற்படி - |

## 1.6.4 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| செலவுகளுக்கான உச்ச எல்லை மற்றும் குறைந்தபட்ச பெறுவனவு எல்லை என்பன முறையே ரூபா 1,500,000 மற்றும் ரூபா 400,000 ஆக ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தில் மற்றும் திறைசேரி கணனி அச்சீட்டுக் குறிப்புக்களில் காணப்பட்டதுடன் அரச உத்தியோகத்தர்களின் முற்பண ‘‘பீ’’ கணக்கில் 2020 திசெம்பர் 31 இல் அந்த எல்லைகள் முறையே ரூபா 1,200,000 மற்றும் ரூபா 120,000 ஆக காட்டப்பட்டிருந்தன. | முற்பண ‘‘பீ’’ கணக்குத் தயாரிக்கப்படும் வரையில் பெறப்பட்டிருந்த மதிப்பீட்டின் பிரகாரம் எல்லைகள் காட்டப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் ஆனால் திருத்தங்களுடனான எல்லைகள் குறிப்பிடப்பட்ட மதிப்பீடு கிடைத்த போது முற்பண ‘‘பீ’’ கணக்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதனால் உச்ச வரவு எல்லை, குறைந்தபட்ச பெறுவனவுகள் எல்லை என்பன சரியாக உள்ளடக்கப்படவில்லை. | கணக்கின் எல்லைகள் சரியாகக் காட்டப்பட வேண்டும். |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் துப்பரவாக்கல் சேவையைப் பெறுவதற்காக தனிப்பட்ட நிறுவனமொன்றுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதுடன் ஒப்பந்தத்தின் பிரகாரம் வங்கிப் பிணை 12 மாதங்களுக்கு பெறப்பட வேண்டிய போதிலும் 3 மாத காலத்திற்கு மட்டுமே பெறப்பட்டிருந்தது. | 2020 ஆம் வருடத்தில் மார்ச் மாதத்தில் கொவிட் 19 தொற்றுநோய் நாடு முழுவதும் பரவியமையால் அரச நிறுவனங்கள் மூடப்பட்டமை, நாடு சாதாரண நிலைக்குத் திரும்புவதற்கு 2020 செப்டம்பர் மாதம் வரையிலான காலம் எடுக்கப்பட்டதால் வங்கிப் பிணை சமர்ப்பிப்பதற்கு வழங்கல் கம்பனிக்கு முடியாமல் இருந்தது. எனினும் 2020 செப்டம்பர் மாதம் 24 ஆந் திகதி சம்பத் வங்கியினால் வெளியிடப்பட்ட இலக்கம் 303720200033 ஆன பிணைச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டது. | ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினால் மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 17 மற்றும் கொவிட் 19 தொற்றுநோய் சூழ்நிலையில் மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்று நடைமுறையில் இல்லை. | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட 31 பதவிகளில் 20 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்களுக்காகப் பொருத்தமான ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு தவறியிருந்தது. அத்துடன் 2020 திசெம்பர் 31 இல் சிரேஷ்ட நிலையில் இரண்டு பதவிகள், மூன்றாம் நிலையில் ஒரு பதவி, இரண்டாம் நிலையில் 3 பதவிகள், முதன்மை நிலை மட்டத்தில் 2 பதவிகளுக்காக அலுவலகர்கள் மற்றும் ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | இற்றைவரையில் ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | தேவையான பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |